# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in


**முன்னிலை : திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 18 /2017**

திருமதி. எப்சிபா கமலம் யோசுவா,
11/2, பெரியார் நகர் EB எதிரில்,
சென்னீர்குப்பம்,
பூவிருந்தவல்லி – அஞ்சல்,
சென்னை–600 056. . . . மேல்முறையீட்டாளர்
(திரு. காலேப் யோசுவா)

எதிர்

உதவி பொறியாளர்/பகிர்மானம்,
நகர்/ஸ்ரீ வைகுண்டம்,
தூத்துக்குடி மின் பகிர்மான வட்டம் ,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33/11 கே.வி. துணை மின் நிலைய வளாகம்,
புதுக்குடி ஸ்ரீ வைகுண்டம். . . . எதிர்மனுதாரர்
(திரு. முஜீப் ரஹ்மான், உதவி பொறியாளர்/ஸ்ரீவைகுண்டம்)

**கேட்புரை நாள் : 5–5–2017**

**ஆணை நாள் : 31.07.2017**

திருமதி. எப்சிபா கமலம் யோசுவா அவர்களின் 23.2.2017 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.18/2017 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 5.5.2017 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

## 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

(அ) குறைதீர்க்கும் மன்றத்தின் நடவடிக்கைகள் உத்தரவுகள் எண்கள் 071 நாள் 21.1.2016 மற்றும் 121 நாள் 3.2.2017 ரத்து செய்யப்படவேண்டும்.

(ஆ) மார்ச் 2014 முதல் கூடுதல் கட்டணமாக அவர் இதுவரையில் IIBல் கட்டிய அதிகப்படியான தொகை அவருக்கு திரும்ப வழங்கப்படவேண்டும்

(இ) அவரது வீடு கடந்த 13.8.2015 முதல் இருளில் கிடப்பதினால் அவர் திருவைகுண்டம் சென்று குடியேற முடியவில்லை. மற்றொருவருக்கு வாடகைக்கு கொடுக்கவும் முடியவில்லை. இதனால் பொருளாதார நஷ்டம் பிரதி மாதம் ரூ.12000/– இந்த விகிதத்தில் இந்த மேல்முறையீடு முடியும்வரை கணக்கிடப்பட்டு வரும் தொகையை அவருக்கு மின்வாரியம் அல்லது உதவி பொறியாளர் கொடுக்க வேண்டும்.

(உ) அவரது மனஉளைச்சல் சரீர பாதிப்பு, வீட்டின் பராமரிப்பு வேலைக்காக சேர்த்து வைக்கப்பட்ட பொருட்கள் காணமல் போவதாலும் ஏற்பட்ட பொருளாதார நஷ்டம் இவைகளுக்கு ஈடாக ரூ.2,00,000/ கொடுக்க மின்வாரியம் அல்லது உதவி பொறியாளருக்கு உத்தரவிட வேண்டும்.

## 2. வழக்கின் சுருக்கம்:

2.1 தாழ்வழுத்த மின்இணைப்பு எண்.390–006–941 திருமதி. எப்சிபா கமலம் யோசுவா என்பவரின் பெயரில் கொடுக்கப்பட்டுள்ளது.

2.2 மேற்கண்ட வீட்டின் தரைதளப்பகுதி அரசு, ஆதிதிராவிடர் நலத்துறையின் மாணவியர் இல்லத்திற்காக வாடகைக்கு விடப்பட்டுள்ளது. மேற்கண்ட குடியிருப்பில் ஆதிதிராவிடர்

நலத்துறையின் மாணவியர் விடுதி செப்டம்பர் 2003 முதல் மார்ச் 2014 வரை வாடகைக்கு இருந்துள்ளது.

2.3 மேற்கண்ட மின்இணைப்பு IIB என்ற கட்டண பட்டியல்படி மின்கட்டணம் 1.2.2008 முதல் வசூலிக்கப்பட்டுள்ளது.

2.4 மேற்கண்ட மின்இணைப்பு எண்.390–006–941 மின்கட்டணம் செலுத்தாமையால் 7.4.2015 அன்று மின்துண்டிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும், மூன்று மாத காலமாக மின் இணைப்பு துண்டிப்பில் உள்ளதால் 4.8.15 ல் ஒப்பந்தம் தள்ளுபடி செய்யப்படும் என்ற termination of agreement notice கொடுக்கப்பட்டுள்ளது.

2.5 மேற்கண்ட நிலையில் மேற்கண்ட மின்இணைப்பின் நிலுவைப்பணம் செலுத்த சென்ற பொழுது அவரின் கணவரின் மின்இணைப்பு எண்.900ல் உள்ள நிலுவைத்தொகையையும் சேர்த்து செலுத்தப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2.6 இது சம்பந்தமாக மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு முறையீடு அளிக்கப்பட்டது மன்றம், மின்கட்டணம் செலுத்தாததால் மின்துண்டிப்பிலுள்ள மின்இணைப்புகளுக்கு வாரிய விதிகளின்படி அதற்குரிய மின்கட்டணம் நிலுவைத்தொகையை செலுத்தி மறு இணைப்பு பெற்றுக் கொள்ளுமாறு ஆணையிட்டுள்ளது.

2.7 மேற்கண்ட ஆணையின்படி ரூ.1238/– செலுத்தி மேல்முறையீட்டாளர் மறு மின்இணைப்பை பெற்றுள்ளார்.

2.8 வீடுகளுக்கு 100 யூனிட் இலவச மின்சாரம் என்று சலுகை அமலுக்கு வந்த பின்பும் தன்னுடைய மின்இணைப்பில் பயன்பாடு 100 யூனிட்களுக்கு குறைவாக இருந்தும் கட்டணம் வசூல் செய்யப்படுவதால் தன்னிடம் அதிகமாக வசூல் செய்யப்பட்ட பணத்தை திரும்ப அளிக்க வேண்டும் என்றும் மன உளைச்சல், அநீதிகள் பொருளாதார நெருக்கடி

போன்றவைகளுக்காக ரூ.75000/– நஷ்ட ஈடாக உதவி பொறியாளரிடமிருந்து பெற்றுத்தரவேண்டும் என்றும், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு மனு செய்துள்ளார்.

2.9 மன்றம் Tariff மாற்ற விண்ணப்பம் அளித்து நிலுவைத்தொகை இருந்தால் அதையும் செலுத்தி விகிதப்படி மாற்றம் பெற்றுக் கொள்ள உத்தரவு இட்டுள்ளது.

2.10 மேற்கண்ட மன்றத்தின் உத்தரவில் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டு மனுவை மின்குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பித்துள்ளார்.

## 3. <u>மன்றத்தின் தீர்வு</u>

3.1 தூத்துக்குடி மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 31.1/3.2.2017 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"<u>மன்றத்தின் முடிவு</u>*
*மனுதாரர் கூற்று மற்றும் உரிமம்தாரர் வாதங்களை ஆராயும்போது மனுதாரரின் மின் இணைப்பு எண்.**390–006–941**ல் ஆதிதிராவிடர் மகளிர் விடுதிக்காக கொடுத்திருந்த போதிலும் மின் இணைப்பு IAல் இருப்பதாக கருதியதாக தெரிவித்துள்ளார்கள். மேலும், உரிமம்தாரர் பதிலையும் கருத்தில் கொண்டு அரசு ஆதிதிராவிடர் மகளிர் விடுதி காலி செய்த விபரம் மனுதாரர் உரிமம்தாரருக்கு supply Code clause **17(3)**ன் படி எந்த தகவலும் தெரியப்படுத்தவில்லை. ஆகவே, மின் இணைப்பானது தொடர்ந்து IIB கணக்கீடு செய்யப்பட்டு வருகிறது. Tariff change செய்ய விண்ணப்ப படிவம் மற்றும் உரிய கட்டணம் விடுபட்ட நிலுவை தொகை ஏதேனும் இருப்பின் (தற்போது மின் இணைப்பு மின் துண்டிப்பில் உள்ளது) அதனையும் செலுத்தி விகிதப்பட்டி மாற்றம் அனுமதி பெற இம்மன்றம் உத்தரவிட்டு இம்மனுவை முடித்து வைக்கிறது ."*

4. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்:</u>

4.1 திருவைகுண்டத்தில் எனது குடியிருப்பு வீட்டின் தரைதளத்தில் குறைந்த மின்அழுத்த ஒரு முனை மின்இணைப்பு 390–006–941 உள்ளது. நான் எனது குடும்பத்துடன் சென்னை வந்துவிட்டதால் வீட்டின் தரைத்தளப்பகுதியை அரசு ஆதிதிராவிடர் நலத்துறை மாணவியர் இல்லத்திற்காக வாடகைக்கு கொடுத்தேன். மின்இணைப்பு திறனிலோ அதன் தன்மையிலோ விகிதப்பட்டியிலோ மாற்றம் எதுவும் இல்லாததால் செப்டம்பர் 2003 முதல் முன்பிருந்த IA விகிதப்பட்டி கீழ் மின்கட்டணத்தை ரொக்கமாக மாணவியர் இல்லம் அவர் பெயரில் செலுத்தி வந்தது. அந்நாட்களில் இந்த இல்லம் மாணவியர் கட்டணம் எதுவும் இன்றி இலவசமாக பாடபுத்தகங்கள் இலவச இருப்பிடம், இலவச உணவு, இலவச ஆடை போன்ற சலுகைகளை பெற்றுவரும் ஒரு இல்லமாக/வீடாக மின்சார வாரியத்தினால் கருதப்பட்டதால் வீட்டு விகிதப்பட்டியிலிருந்து வேறு விகிதப்பட்டிக்கு மாற்றம் செய்யப்படாமல் செயல்பட்டு வர அனுமதித்தனர். முடிவில் மார்ச் 2014ல் இல்லம் காலி செய்யப்பட்டு அரசு சொந்த கட்டிடத்திற்கு சென்றது அவர்கள் தங்களது மின்கட்டணமாக ரூ.1428/–யை கட்டி தங்கள் கணக்கை முடித்து சென்றார்கள்.

4.2 அதன் பின் நான் குறைந்தபட்ச மின்கட்டணத்தை விகிதப்பட்டி மாற்றத்தை அறியாமல் இணையதளத்தில் செலுத்தி வந்தேன். இந்நிலையில் எனது கணவர் 12.8.2015 அன்று திருவைகுண்டத்தில் இருந்தார். அப்பொழுது அவரது கரத்தில் notice for termination of agareement, D.No.982 dated 3.8.2015 மாற்றப்பட்டு 4.8.2015 என தேதியிடப்பட்டு கொடுக்கப்பட்டது. அதில் 7.4.2015 லிருந்து அல்லது மூன்று மாதங்களுக்கு மேலாக என் மின்இணைப்பு மின்துண்டிப்பில் உள்ளது ஏனென்றால் மின்துண்டிக்கப்பட்ட அன்று எனது மின்கட்டண நிலுவைத்தொகையாக ரூ.115/– உள்ளது. நான் இந்த நோட்டீஸ் பெற்றுக்

கொண்ட 3 மாதத்திற்குள் நிலுவைத்தொகை கட்டி மறு இணைப்பு பெற்றுக்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருந்தது.

4.3 எனது கணவர் உதவி பொறியாளரைக் காண 12.8.2015 அன்றே சென்றார். உதவி பொறியாளர் அலுவலகத்தில் இல்லை. 13.8.2015 அன்று அவரை அலுவலகத்தில் சந்தித்தபோது எனது கணவர் திரு. காலேப் யோசுவா, சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு SSI Tiny Sectorல் ஒரு தொழில் மும்முனை மின்இணைப்பு எண்.B-900ல் நடத்தி வந்தததாகவும் அதில் மின்கட்டணம் நிலுவைத்தொகையில் உள்ளதாகவும் அதை அவர் கட்டினால்தான் 390–006–941 ன் மறு மின்இணைப்பு அவரது இல்லத்திற்கு கொடுக்கப்படும் என்று கூறினார்.ஒருபக்கம் துண்டிக்கப்பட்ட மின்இணைப்பின் நிலுவைத்தொகையை 3 மாதங்களுக்குள் கட்ட உத்தரவு மறுபக்கம் கட்டவேண்டிய நிலுவைத்தொகையை செலுத்த சென்றால் வாங்கமாட்டேன் என்ற மறுமொழி இதற்கு 15 ஆண்டுகளுக்கு முன்பு நடந்ததாக கூறப்படும் ஏற்கனவே ஒரு முடிவு பெற்ற சம்பவம் இவை அனைத்தும் உதவி பொறியாளரின் அதிகார துஷ்பிரயோகமாகவே காணப்பட்டது. ஆனால் எனது குடியிருப்பு வீடு பல மாதங்களாக இருளடைந்து கிடப்பதால் வீட்டுக்கு கட்டவேண்டிய நிலுவை தொகையை வாங்கி கொண்டு மறுமின்இணைப்பு கொடுக்க கேட்டேன். ஆனால், அவரோ அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

4.4 இந்த B-900 மின்இணைப்பு நிலுவைத்தொகை குறித்து என் கணவர் மின் உதவிபொறியாளருக்கு விளக்கியதின் சாரம்சமாவது இந்த B900 நிலுவைத்தொகை பிரச்சனையில் எனது கணவர் தமிழ்நாடு மின் வாரிய சேர்மன், செயற்பொறியாளர்/ ஊரகம்/தூத்துக்குடி மற்று இளநிலை பொறியாளர்/விநியோகம்/ திருவைகுண்டம் மீது சென்னை உயர்நீதி மன்றத்தில் WMP No.12028 & 12030 of 2001 in WPS 8467 & 8468 of 2001 ல் வழக்கு தொடர்ந்த விவரத்தையும் நீதிபதி P சண்முகம் அவர்களால் வெள்ளிக்கிழமை 15ம் நாள், ஜூன் 2001 இந்த நிலுவைத்தொகை கோரிக்கைக்கு

இடைக்காலத்தடை விதிக்கப்பட்டதையும் எடுத்துக் கூறினார். இந்த நீதிமன்ற உத்தரவு மேற்கூரிய மூன்று அதிகாரிகளுக்கும் நீதிமன்றம் மூலமாக அனுப்பப்பட்டதை உத்தரவிலே காணலாம். மேலும், உதவி பொறியாளருக்கு **21.6.2001** அன்று மாலை **16.20** க்கு நகல் நேரில் கொடுக்கப்பட்டு அவரது கையொப்பம் பெறப்பட்டது. இவை அனைத்திற்கு பின்பும் என்னிடம் நீ இந்த வழக்கின் நீதிமன்ற உத்தரவு நகலை கொண்டு வா அதன் பேரில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது மன்றத்தின் நடவடிக்கை.

**4.5** மேலும், உயர்நீதிமன்ற இடைக்காலத்தடை உத்தரவை மின்வாரியம் ஏற்றுக்கொண்டதினால் தடையை நீக்க எந்தவிதமான முயற்சியும் நீதிமன்றத்தில் மேற்கொள்ளவில்லை. ஆதலால் அது இப்பொழுது எனக்கு ஒரு முடிவுபெற்ற நீதிமன்ற வழக்கு ஆகும்.

**4.6** இதோடு மட்டுமல்ல, உதவி பொறியாளரது நடவடிக்கை முறையானதும் அல்ல. ஏனென்றால் உதவி பொறியாளர் எழுப்பிய நிலுவைத்தொகை எனது கணவரது முடிந்துபோன சிறுதொழில் மும்முனை மின்இணைப்பு சம்பந்தப்பட்டது. ஆனால் அவர் துண்டித்தது என் பெயரில் உள்ள எனது வீட்டு உபயோக மின்இணைப்புகள். இந்த இரண்டு மின்இணைப்புகளையும் ஒன்றுக்கொன்று இணைத்து சம்பந்தப்படுத்துவது எந்த வகையிலும் நியாயம் அல்ல. B-**900** எனது கணவரது **15** ஆண்டுகளுக்கு முன்பே முடிந்துபோன மும்முனை மின்இணைப்பு **390–006–941** அவரது தற்போதைய குடியிருப்பு வீட்டு உபயோக குறைந்த மின் அழுத்த ஒருமுனை மின்இணைப்பு. ஒருவரது கடந்துபோன மும்முனை மின்இணைப்பை கொண்டு இப்பொழுது நிலுவையில் உள்ள மற்றொருவரது வீட்டு மின்இணைப்போடு சம்பந்தப்படுத்தி இரண்டாவது நபரின் மின்இணைப்பை துண்டிப்பது எவ்விதத்திலும் இயற்கையான நியதியல்ல.

4.7 அடுத்து மன்ற நடவடிக்கை உத்தரவு எண்.071 நாள் 21.1.2016ல் பக்கம்2ல் வாரியத்தரப்பு பதிலில் உதவி பொறியாளர் கூறுவதை கவனியுங்கள், மின்இணைப்பு எண்.B-900 க்கு மின்கட்டணம் செலுத்தாததால் 10.7.2001 அன்று மின்துண்டிப்பு செய்யப்பட்டு 4.7.2005ல் நிரந்தரமாக கணக்கு முடிக்கப்பட்டது. அதாவது 15, ஜூன் 2001ல் உயர்நீதிமன்ற இடைக்காலத்தடைக்குப் பின் எனது கணவர் சிறிதுகாலம் தொழில் செய்து வந்து அதன்பின் தனது தொழிலை நிரந்தரமாக ஒரு முடிவுக்கு கொண்டுவந்ததால் செலுத்தவேண்டிய நிலுவைத்தொகை முழுவதும் 4.7.2005ல் செலுத்தப்பட்டு அவரது கணக்கு நிரந்தரமாக முடிக்கப்பட்டது.

4.8 B-900 நிலுவைக்கணக்கு 4.7.2005ல் நிரந்தரமாக முடிக்கப்பட்டது என்பதை உதவி பொறியாளரே கூறுகிறார். கணக்கு முடிக்கப்பட்டு தொகைப்போக மீதி செலுத்தவேண்டிய தொகை ரூ.11079 ஆகும். மேற்படி தொகையை செலுத்தக்கூறி 14.3.2005ல் கடிதம் வழங்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது என்கிறார். இந்த ஒப்புதல் குறித்து என் கணவர் மன்ற நாள் 4.1.2016 அன்றே கேள்வி எழுப்பினார். இந்த ஒப்புதல் கடிதத்தில அவரது கணவரது கையெழுத்து இல்லை. மாறாக அவருக்காக யாரோ ஒருவர் கையெழுத்திட்டிருந்ததாக தெரியவந்தது. ஆதலால், மன்ற நடவடிக்கை நாள் அன்றே எனது கணவர்அந்த ஒப்புதல் தனது என்பதை மறுத்தார். இப்பொழுது கணக்கு நிரந்தரமாக 4.7.2005 அன்று முடிக்கப்பட்ட பின் மீதி செலுத்தவேண்டிய தொகை 14.3.2015 அன்று எங்கிருந்து உதயமானது. 14.3.2015ல் எழுந்த நிலுவைத்தொகை 4.7.2005ல் நிரந்தரமாக முடிக்கப்பட்டது என்பதுதானே சரியான பொருள்.

4.9 இப்பொழுது பார்வை எண்.2ல் கூறப்பட்ட 71/21.1.2016ல் மன்றத்தின் முடிவு 390–006–941ல் மின்கட்டணம் செலுத்தாததால் மின்துண்டிப்பு செய்யப்பட்டுள்ளது. மறுமின்இணைப்பு பெற வாரிய விதிகளின்படி அதற்குரிய மின்கட்டண நிலுவைத்தொகையை செலுத்தி பின்னர் மறு

மின்இணைப்பு பெற்றுக்கொள்ளுமாறு இம்மன்றம் உத்தரவிட்டு இம்மனுவை முடித்துவைக்கிறது.

4.10 இந்த தீர்ப்பு முற்றிலுமாக ஒருதலைபட்சமானது பாரபட்சமானது நான் 13.8.2015 அன்று மின்கட்டண நிலுவை தொகையை செலுத்தசென்றபோது உதவி பொறியாளரின் தவறான சிந்தனையில் எழுந்த தவறான முடிவினால் கட்டணத்தை வாங்க மறுத்தார்கள். இப்பொழுது மன்றம் 21.1.2016ல் நான் நிலுவை கட்டணத்தை செலுத்த தவறிவிட்டேன். ஆதலால் நிலுவைத்தொகையை அபராதத்துடன் கட்டவேண்டும் என்பது எந்த வகையில் இயற்கை நியதி

4.11 இந்நிலையில் வேறு வழியின்றி கேட்ட நிலுவைத்தொகையை செலுத்தி மறு மின்இணைப்பு பெற்றேன். மின்கட்டண ரசீது எண்கள் 9987276/9.2.2016 ரூ.565/– மற்றும் 9887270/9.2.2016 ரூ.673/– ஆக மொத்தம் 1238/– செலுத்தினேன்.

4.12 குடும்ப மின்இணைப்பில் முதல் 100 யூனிட்டுக்கு மின் இலவசம் என்று அறிவிக்கப்பட்டு அது அமுலுக்கு வந்த பின் எனக்கு எந்தவிதமான மின்கட்டணமும் இருக்காது என்று நினைத்தேன். ஆனால், உதவி பொறியாளர் மின்கட்டணம் செலுத்த வேண்டும் அவருக்கு இலவசம் கிடையாது என்றார்கள். காரணம் கேட்டால் 1.2.2008 முதல் அரசு ஆதிதிராவிடர் மகளிர் இல்லம் இயங்கி வருவதால் அவரின் மின்இணைப்பு IAயிலிருந்து IIBக்கு மாற்றப்பட்டுள்ளது என்றார்கள். ஆனால், இந்த மின்இணைப்பு தொடக்கத்தில் IAல் இருந்ததை ஏற்கெனவே ஒத்துக்கொண்டார்கள். 2003 செப்டம்பர் முதல் இந்த அரசு மகளிர் இல்லம் IAயிலே இயங்கி வந்தது. சுமார் 5 ஆண்டுகளுக்குப்பிறகு அவருக்கு அல்லது மகளிர் இல்லத்திற்கோ எந்த விதமான அத்தியாவசமான முன் அறிவிப்பு/நோட்டீஸ் எதுவும் இல்லாமல் விகிதப்பட்டி எண். மாற்றப்பட்டுள்ளது. மகளிர் இல்லம் அரசுக்குரியதால் அவர்கள் மின்கட்டணம் கூடுதலானதோ அல்லது குறைவானதோ அல்லது விகிதப்பட்டி மாற்றம்

குறித்தோ கவலையற்றவர்களாக மின் அட்டையில் என்ன தொகை கூறப்பட்டுள்ளதோ அதை செலுத்தி வந்தார்கள். அதுதான் உண்மை

4.13 ஆதிதிராவிடர் நலம், தனி வட்டாட்சியர் தங்களது கடிதம் எண். ஆ456/2015 நாள் 17.2.2017ல் தங்களது இல்லம் செப்டம்பர் மாதம் 2003 முதல் மார்ச் 2014 வரை இயங்கிவந்துள்ளது. விகிதப்பட்டி எண் செப்டம்பர் 2010ஆம் வருடத்தில் மாற்றம் 2B1க்கு செய்யப்பட்டது என்கிறார்கள். உதவி பொறியாளர் தனது கடிதம் எண்.11–2/17 நாள் 11.1.2017ல் தாங்கள் வீட்டு மின்இணைப்புக்காக பெற்றிருந்த தங்களின் மின்இணைப்பை 390–006–941) ஆதி திராவிடர் நல மாணவிகள் விடுதிக்காக பயன்படுத்தப்பட்டதை தொடர்ந்து அதற்கான விகிதப்பட்டியான (Tariff) 2B1 லிருந்து கடந்த 1.2.2008 முதல் கணக்கீடு செய்யப்பட்டு வருகிறது. மேற்படி விடுதி பயன்பாட்டினை தொடர்ந்து கடந்த 1.2.2008 முதல் விகிதப்பட்டி IIB1க்கு மாற்றப்பட்டது என்று கூறுகிறார்.

4.14 அவரது இல்லத்தில் என்று முதல் அரசு மகளிர் இல்லம் இயங்கி வந்தது குறித்து மகளிர் இல்லம் ஒருவித அறிக்கையும் உதவி பொறியாளர் மற்றொரு அறிக்கையும் வெளியிடுகிறார்கள். விகிதப்பட்டி மாற்றத்திலும் இருவருக்கும் மாறுபட்ட நிலை ஆனால், அரசு மகளிர் இல்லம் 2003 செப்டம்பர் முதல் இயங்கி வந்ததே உண்மை ஏனென்றால் நான் செப்டம்பர் 2003ல் அரசு மகளிர் இல்லத்திற்கு எனது வீட்டின் தரைத்தளபகுதியை வாடகைக்கு கொடுத்துவிட்டுதான் சென்னை வந்துகுடியேறினேன்.

4.15 இந்த மகளிர் இல்லத்தின் விகிதப்பட்டி மாற்றத்தை 1.2.2008 முதலோ அல்லது செப்டம்பர் 2010 முதலோ, அதுகுறித்து அவருக்கு உதவி பொறியாளர் தெரிவித்திருந்தால் இல்லம் காலி செய்யப்பட்ட மார்ச் 2014ல் நான் விகிதப்பட்டி மாற்றத்திற்கு மின்இணைப்பு 209–006–941க்கு விண்ணப்பம் கொடுத்திருப்பேன். ஆனால் அவருக்கு அத்தியாவசியமான அறிவிப்பு/நோட்டீஸ் கொடுக்கப்படாததால் நான் இல்லம் தொடங்கப்பட்ட நாளில் உள்ள

விகிதப்பட்டி IAயிலே இருந்து வருகிறது என்ற எண்ணத்தில் இருந்து விட்டேன். ஆக உதவி பொறியாளரின் தவறினால் நான் மார்ச் 2014 முதல் கூடுதல் மின்கட்டணம் செலுத்த நேர்ந்தது. இதை எதிர்த்து மீண்டும் குறைதீர் மன்றம் 25.11.2016 அன்று சென்றேன். மன்றம் 10.1.2017ல் கூடியது மகளிர் விடுதி காலி செய்த விவரம் மனுதாரர் உரிமம்தாரருக்கு supply Code clause 17(3)ன்படி எந்த தகவலும் தெரியப்படுத்தவில்லை. ஆகவே, மின்இணைப்பு தொடர்ந்து IIBக்கு கணக்கீடு செய்யப்பட்டு வருகிறது. Tariff change செய்ய விண்ணப்ப படிவம் மற்றும் உரிய கட்டணம் விடுபட்ட நிலுவைத்தொகை எதுவும் இருப்பின் (தற்போது மின்இணைப்பு மின்துண்டிப்பில் உள்ளது) அனைத்தையும் செலுத்தி விகிதப்பட்டி மாற்றம் அனுமதிப்பெற இம்மன்றம் உத்தரவிட்டு இம்மனுவை முடித்து வைக்கிறது என்று கூறுகிறது. இது ஒரு துரதிஷ்டமான தீர்ப்பு.

4.16 செப்டம்பர் 2003ல் மகளிர் இல்லம் இயங்க ஆரம்பித்தது. 1.2.2008 முதல் இல்லம் இயங்க ஆரம்பித்தது என்ற உதவி பொறியாளரின் தகவல் தவறானது. இதற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாணவியர் இல்லத்திலிருந்து பெறப்பட்ட கடித எண்.456/2015 நாள் 17.2.2017ன் நகல் இணைக்கப்பட்டுள்ளது. ஆக செப்டம்பர் 2003 முதல் மகளிர் இல்லம் தங்களது மின்கட்டணத்தை வீட்டுக்குரிய விகிதப்பபட்டி எண். IAலே செலுத்தி வந்தது வீடும் ஏற்கனவே IA விகிதப்பட்டியின் கீழ் தான் இருந்தது. அரசு மகளிர் இல்லம் வந்த பின்பும் மின்இணைப்பு திறனிலோ அல்லது தன்மையிலோ எந்தவிதமான மாற்றமும் இல்லை. IA விதிகப்பட்டி ஏற்றுக் கொள்ளப்பட்டதால் உதவி பொறியாளரிடமிருந்து விகிதப்பட்டி மாற்றத்திற்கு விண்ணப்பம் எதுவும் கேட்கப்படவில்லை. என்னுடைய தரப்பிலிருந்து கொடுக்கப்படவும் இல்லை. விகிதப்பட்டி மாற்றம் எதுவும் இல்லாத நிலையில் வீட்டில் அவ்வப்போது வந்து குடியேறுவோர், வெளியேறுவோர் பற்றிய தகவல் மின்சார வாரியத்திற்கு கொடுக்க வேண்டியது தேவைதானா ?. குடியிருப்பவரால் விகிதப்பட்டி மாற்ற வேண்டிய

நிலை ஏற்பட்டால் மாத்திரமே மின்வாரியத்திற்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்பதுதானே உண்மை. ஆக இங்கு மகளிர் இல்லம் செப்டம்பர் 2003 முதல் 1.2.2008 வரை /செப்டம்பர் 2010 வரை இயங்கி வந்த விவரம் மின்சார வாரியத்திற்கு தெரியாதா என்ன ? அவர்கள் அறியத்தானே IAன் கீழ் மின்கட்டணம் செலுத்தப்பட்டு வந்தது.

5. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் :</u>

5.1 மனுதாரர் குறிப்பிட்டுள்ள மின்இணைப்பு எண்.209–006–941க்கு உரிய கட்டிடத்தில் அரசு மாணவியர் விடுதி (ஆதி திராவிட நலத்துறை) இயங்கி வந்ததால் அதற்குரிய வீதப்பட்டியான TF 2B1ல் கணக்கீடு செய்யப்பட்டு வந்தது.

5.2 மின்இணைப்பு பண்.209–006–941க்கு உரிய மின்கட்டணங்கள் செலுத்தாத காரணத்தினால் வருவாய் பிரிவு அலுவலகத்தில் இருந்து பெறப்பட்ட T.A. Notice மனுதாரருக்கு சார்பு செய்யும் விதமாக அவரது கணவரிடத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

5.3 மனுதாரரின் கணவரான திரு. காலேப் யோசுவா அவர்கள் என்னை அலுவலகத்தில் வைத்து இதுவரை சந்திக்கவே இல்லை. அவரை நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் நடைபெற்ற நாளான 31.1.2017 அன்று தான் நேரில் சந்தித்தேன்.

5.4 மனுதாரரின் கணவரின் பெயரில் உள்ள மின்இணைப்பு எண்.390–006–900க்கு உரிய நிலுவைத்தொகையினை ரத்து செய்து தருமாறு கோரிய கடிதம் இவ்வலுவலகத்தில் பெறப்பட்டது. மேற்படி கடிதம் வருவாய் பிரிவு அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது. மேலும், நிலுவைத்தொகையினை தள்ளுபடி செய்திட உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்குமாறு வருவாய் பிரிவில் இருந்து கோரப்பட்டது. ஆகவே, நுகர்வோர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் நகலை இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கும்பட்சத்தில் நிலுவைத்தொகையினை தள்ளுபடி செய்திட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

5.5 மனுதாரரின் கணவர் பெயரில் உள்ள மின்இணைப்பு எண்.390–006–900) நிலுவைத்தொகையினை வசூல் செய்யும்பொருட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன. மேற்படி மனுதாரர் கூறியுள்ள புகார்கள் யாவும் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் 21.1.16 எடுத்துரைக்கப்பட்டு மன்றமும் அதனை கருத்தில் எடுத்துக் கொண்டு உத்தரவினையும் பிறப்பித்தது அதனை மனுதாரர் ஏற்றுக்கொண்டு மறு மின்இணைப்பு பெற்றுக் கொண்டுள்ளார்.

5.6 மனுதாரரின் கணவரின் பெயரில் உள்ள மின்இணைப்பு 390–006–900க்குரிய நிலுவைத்தொகைகள் குறித்து ஏற்கனவே கடந்த 14.3.2005 அன்று நுகர்வோருக்கு கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வலுவலக கோப்பின் வாயிலாக தெரிய வருகிறது. மேலும், நிலுவைத்தொகையின் விவரங்களும் இன வாரியாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

5.7 மனுதாரரின் மின்இணைப்பு எண்ணுக்கு 390–006–941 கடந்த 4/15 மாதம் மாதாந்திர கணக்கீடு செய்யப்பட்டு உரிய தொகை மனுதாரரால் உரிய காலக்கட்டத்திற்குள் செலுத்தப்படாததினால் மின்இணைப்பு துண்டிக்கப்பட்டது. மேலும், மனுதாரரின் கணவரின் பெயரில் உள்ள மின்இணைப்புக்கு உரிய நிலுவைத்தொகையினை வசூல் செய்யுமாறு கோரி பெறப்பட்ட கடிதத்தின் அடிப்படையிலேயே மறு மின்இணைப்பு தரப்படவில்லை. மேலும், மனுதாரர் இது குறித்து நுகர்வோர் குறைதீர்ப்பு மன்றம் 21.1.16 நடைபெற்றதில் எடுத்துக் கூறியுள்ளார். மேலும், மன்றத் தீர்ப்பினை ஏற்று மறு மின்இணைப்பும் பெற்றுள்ளார்.

5.8 மனுதாரர் மேற்படி மின்இணைப்பு 390–006–941ஐ வீட்டு மின்இணைப்பாக பெற்றுள்ளார். அவ்வாறு வீட்டு மின்இணைப்பாக பெற்றுள்ள கட்டிடத்தை வியாபார நோக்கத்துடன் அரசு ஆதிதிராவிட மாணவியர் இல்லத்துக்கு வாடகைக்கு கொடுத்துள்ளார். இது குறித்து மின்வாரிய அலுவலகத்திற்கு எவ்வித தகவலும் தெரிவிக்கப்படவில்லை மாறாக வாரியத்தினால் அது கண்டுபிடிக்கப்பட்டு உரிய வீதப்பட்டிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

5.9 மனுதாரரின் மின்இணைப்பு எண்.390–006–941க்கு வீட்டு உபயோகம் எனக்கூறி வீதப்பட்டி IAல் பெற்றுள்ளார். ஆனால், மனுதாரர் அதனை வேறு உபயோகத்திற்கு பயன்படுத்தி உள்ளார் ஆகவே, அதனை மனுதாரர் தான் வாரியத்திற்கு தெரிவித்து உரிய வீதப்பட்டி மாற்றம் செய்திருக்க வேண்டும்.

5.10 மனுதாரர் வீதப்பட்டி மாற்றம் குறித்த விண்ணப்பம் உதவி பொறியாளரால் கேட்கப்படவில்லை என கூறியுள்ளார். மனுதாரரின் மின்இணைப்பின் பயன்பாடு குறித்து மனுதாரர் தான் தெரிவித்து இருக்க வேண்டும். மின்இணைப்பு சம்பந்தமான விண்ணப்பங்கள் உரிமையாளரைத் தவிர உரிமையாளரின் ஒப்புதல் பெறாமல் மற்றவர்களிடமிருந்து பெறப்படுவதில்லை.

## 6. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:</u>

6.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 5.5.2017 அன்று மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை நடத்தப்பட்டது.

6.2 மேல்முறையீட்டாளர் சார்பில் அவரது கணவர் திரு. காலேப் யோசுவா அவர்கள் கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தார்.

6.3 எதிர்மனுதாரர் சார்பில் திரு. C. முஜீப் ரஹ்மான் உதவி பொறியாளர்/ஸ்ரீவைகுண்டம் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தார்.

## 7. <u>கேட்புரை நாளில் மேல்முறையீட்டாளர் எடுத்துரைத்த வாதங்கள்</u>

7.1 திரு. காலேப் யோசுவா அவர்கள் மேல்முறையீட்டாளர் மேல்முறையீட்டு மனுவிலுள்ள வாதங்களையே மீண்டும் வலியுறுத்தினார்கள்.

7.2 மேலும், தன்னுடைய எழுத்துப்பூர்வமான வாதுரையையும் சமர்ப்பித்தார். அதிலுள்ள வாதங்களையும் கேட்புரையின்பொழுது எடுத்துரைத்தார். அந்த எழுத்துபூர்வமான வாதுரையிலுள்ள இந்த வழக்குக்கு சம்பந்தமான வாதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(i) அவரது வீட்டில் அரசு மாணவியர் இல்லம் செப்டம்பர் 2003 முதல் இயங்கி வந்தது ஆரம்பத்தில் IAல் வீதப்பட்டி எண் இருந்தது ஆனால் சுமார் 5 ஆண்டுகள் கழித்து அல்லது தனி வட்டாட்சியர் தகவல்படி சுமார் 7 ஆண்டுகள் கழித்து உதவி பொறியாளர் வீதப்பட்டி எண்ணை IAலிருந்து 2Bக்கு மாற்றியுள்ளார். இதன் விபரம் முற்றிலுமாக எனக்கு மறைக்கப்பட்டுவிட்டது. உதவி பொறியாளர் மின்வாரிய விதிமுறைகளை புறக்கணித்து எனக்கு எந்தவிதமன அறிவிப்பு/நோட்டீஸ் எதுவும் கொடுக்காமல் தன சுய இச்சையின்படியே நடந்துகொண்டார். ஆனால் மகளிர் இல்லம் அரசு சார்புடையதால் வீதப்பட்டி மாற்றம் எதுவும் கண்டுகொள்ளாது மின்அட்டையில் குறிப்பிட்ட தொகையை அவ்வப்போது செலுத்திவந்தனர்.

(ii) வீதப்பட்டி நிர்ணயிக்கப்படுவது ஒரு கட்டிடத்தையோ அல்லது ஒரு இல்லத்தையோ பொருத்தது அல்ல. மாறாக அதை உபயோகப்படுத்துபவர்களின் பயன்பாடு தன்மையை நோக்கத்தை பொருத்தது. ஒருவர் ஒரு கட்டிடத்தை தனது குடியிருப்பு இல்லத்திற்காகவும் மற்றொருவர் அதை ஒரு தொழில் கூடாரமாகவும் மற்றொருவர் அதை தனது வணிக/வியாபார ஸ்தலமாகவும் நான்காவது நபர் அதை தன் அலுவலகமாகவும் ஐந்தாவது நபர் அதை தனது மருத்துவனையாகவும் பயன்படுத்தலாம். கட்டிடம் ஒன்றுதான் ஆனால் அதனை பயன்படுத்தும் விதத்தில் வித்தியாசம் இந்த பயன்பாட்டுக்களைக் கொண்டுதான் மின் வீதப்பட்டி நிர்ணயிக்கப்படுகிறது.

(iii) என்னுடைய இல்லத்தின் நிலைப்பாட்டில் நான் அதை அரசு மாணவியர் (ஆதிந) இல்லத்திற்காக செப்டம்பர் 2003ல் கொடுத்தபோது மின்வாரியத்தின் அப்போதைய பொறியாளர்கள் இதை முற்றிலுமாக மாணவியர் குடியிருப்பு இல்லமாக ஒருவருடைய குடியிருப்பு

வீடாக கருதி வீதப்பட்டியில் எதுவும் மாற்றம் செய்யாது, அதை தொடக்கத்தில் இருந்த அதே IA வீதப்பட்டியில் செயல்பட அனுமதித்தனர். இதனால் மாணவியர் இல்லத்திற்கு வீதப்பட்டி மாற்றம் தேவைபடவில்லை. என்னிடமிருந்து மாற்றத்திற்கான விண்ணப்பம் மின்வாரியத்திற்கு தேவையற்றதாக இருந்து ஆனாலும் மாணவியர் இல்லம் என் இல்லத்திலிருந்து செப்டம்பர் 2003 முதல் செயல்படுவதை வாரியம் நன்கு அறிந்ததாகவே இருந்தது.

(iv) ஒருவடைய குறைந்த மின்அழுத்த இணைப்பின் வீதப்பட்டியை அவருக்கு அறிவிப்பு/தகவல்/நோட்டீஸ் எதுவும் இல்லாமல் கூடுதல் வீதப்பட்டிக்கு மாற்றுவது உதவி பொறியாளரின் அதிகாரத்திற்கு உட்பட்ட நடவடிக்கையா? நிச்சயமாக வாரிய விதிமுறைப்படி இல்லை.

(v) இந்நிலையில் உதவி பொறியாளரிடமிருந்து இந்த வீதப்பட்டி மாற்றம் குறித்து என் கடிதம் நாள் 6.1.2017 வாயிலாக, கேட்க அவர் தனது கடிதம் எண்.11–2/17 நாள் 11.1.2017 வாயிலாக எனது வீதப்பட்டி IAலிருந்து IIBக்கு மாற்றம் 1.2.2008 முதல் செயல்படுத்தப்பட்டது என சுமார் 9 ஆண்டுகளுக்குப் பிறகு தெரிவிக்கிறார்.

(vi) அரசு ஆதிந மாணவியர் இல்லம் எனது வீட்டிலிருந்து மார்ச் 2014ல் காலி செய்யப்பட்டு அவர்கள் தங்கள் சொந்த கட்டிடத்திற்கு சென்றார்கள். வீதப்பட்டி மாற்றம் அறியாது, குறைந்தபட்ச மின்கட்டணத்தை இணையதளத்தில் செலுத்தி வந்தேன்.

(vii) இந்நிலையில் எனது கணவர் 12.8.2015 அன்று திருவைகுண்டம் சென்றபோது என் வீடு இருளில் கிடப்பதை அறிந்து அதிர்ச்சியுற்றார். மின்இணைப்பு துண்டிப்பு செய்யப்படும் முன் எனக்கு அத்தியாவசியமானஅறிவிப்பு/தகவல்/நோட்டீஸ் எதுவும் கொடுக்கப்படவில்லை. ஆதலால் நான் மின் துண்டிப்புக்குறித்து அறியாதவளாக இருந்தேன்.

(viii) 7.4.2015 அன்று மின்இணைப்பு துண்டிக்கப்பட்டு பிப்ரவரி 2016க்கு பின் ஒரிருமாதங்கள் மின்இணைப்பு கொடுக்கப்பட்டது. ஆனால், என் மின்கட்டணம் IAயின் கீழ் இல்லை என்பதை

நான் அறியவந்து IA வீதப்பட்டி மீண்டும் கேட்க அதை உதவி பொறியாளர் மறுக்க மீண்டும் மின்துண்டிப்பு இதுவரை சுமார் 2 வருடங்களாக தொடர்ந்து வருகிறது. இதற்கு நீதியின் அடிப்படையில் நீதிமன்றத்திற்கு வெளியே ஒரு நியாயமான தீர்ப்பு மின்குறைதீர்ப்பாளரிடம் கிடைக்கும் என நம்பித்தான் இந்த மேல்முறையீடு.

(vii) உதவி பொறியாளரால் எனது வீதப்பட்டியை IAலிருந்து IIBக்கு மாற்றியபோது எனக்கு அத்தியாவசியமான செயல்விளக்கத்தகவல் அறிவிப்பு எதுவும் கொடுக்கப்படவில்லை. நுகர்வோருக்கு அறிவிப்பு எதுவும் கொடுக்காமல் அவரது வீதப்பட்டியை மாற்ற உதவி பொறியாளருக்கு மின்வாரியத்தில் கொடுக்கப்பட்ட அதிகாரம் எங்கே ? மாணவியர் இல்லம் அரசுக்குரியதால் மின்கட்டணம் உயர்வு எதையும் அவர்கள் கண்டுக்கொள்ளாமல் மின்அட்டையில் கொடுக்கப்பட்டுள்ள தொகையை கட்டி வந்தனர். என் வீதப்பட்டி IAலிருந்து IIBக்கு மாற்றப்பட்டது குறித்து உதவி பொறியாளர் தெரிவித்திருந்தால் நான் மாணவியர் இல்லம் காலி செய்யப்பட்ட உடனே மின்சார வாரியத்திற்கு உடன் வீதப்பட்டி மாற்றத்திற்கு மனு கொடுத்திருப்பேன். ஆதலால் மாற்றத்திற்கு நான் விண்ணப்பம் கொடுக்கவில்லை என்பது ஏற்புடையதுஅல்ல. ஆக உதவி பொறியாளர் தவறுகளுக்கு நான் பலிகடாவாக்கப்பட்டு IIB வீதப்பட்டியில் நுகர்வோர்தான் செலுத்த வேண்டுமா ? அவர் செய்த தவறுகளுக்கு அவர்தானே பொறுப்பு ஏற்கவேண்டும். மின்சார வாரிய பொறியாளர் செய்யும் தவறுகளுக்கு எல்லாம் நுகர்வோர் எப்பொழுதும் பொறுப்பேற்றுக்கொண்டு பொருளாதார நஷ்டம் மனகிலேசம் அடைந்துக்கொண்டே இருக்க வேண்டுமா ? இதற்கு இந்த மின்சார ஒழுங்குமுறை ஆணையம் ஒரு முடிவு எடுக்கத்தான் வேண்டும்.

**7.3** மேலும், **9.5.2017** நாளிட்ட எழுத்துப்பூர்வமான கூடுதல் வாக்குமூலத்தில் கீழ்கண்ட வாதங்களை தெரிவித்துள்ளார்.

(i) வீட்டு மின்இணைப்பு எண்.390–006–941ல் உள்ள பகுதியில் அரசு ஆதிதிராவிட நல பள்ளி மாணவியர் இல்லம் செப்டம்பர் 2003ல் மனுதாரர் அறிய அதன் பின் மாணவியர் இல்லம் பார்வையில் 31.1.2008 வரை சுமார் 6 ஆண்டுகள் குறைந்த வீதப்பட்டி IAயிலும் அதன் பின் மனுதாரர் மற்றும் மாணவியர் இல்லம் மின்சார வாரியத்திடமிருந்து எந்தவிதமான அறிவிப்பும் பெறாது வாரியம் வீதப்பட்டி 2Bல் இயங்க தங்கள் மின்கட்டணத்தை மின்அட்டையில் உள்ளபடி அவ்வப்போது செலுத்தி வந்துள்ளார்கள். கூடுதலான கட்டணமோ குறைவான கட்டணமோ அரசு பணம் அரசுக்கே சென்றது. ஆதலால் அது குறித்து மாணவியர் இல்லம் கவலை கொள்ளவில்லை.

(ii) மாணவியர் இல்லத்திற்கான குறைந்த வீதப்பட்டி IAயிலிருந்து கூடுதலான வீதப்பட்டி 2Bக்கு மாற்றப்பட்டதை மின்சார வாரியம் மிக அத்தியாவசியமான இந்த தகவலை மனுதாரருக்கு தெரிவிக்கவில்லை. மின்சார விதிமுறைகள் மீறப்பட்டுள்ளன. புறக்கணிக்கப்பட்டுள்ளன. கடைபிடிக்கப்படவில்லை. 390–006–941ல் எழுந்த பிரச்சனைகளுக்கு மின்சார வாரியத்தின் இந்த அலட்சியப்போக்குக்கு உதவி பொறியாளரே காரணம்.

(iii) மாணவியர் இல்லம் மார்ச் 2014ல் காலியான பின்பு மின்சார வாரியம் மாத்திரம் அறிந்திருந்த வீதப்பட்டி மாற்றத்தை மனுதாரருக்கு தெரிவிக்காததினால் வீதப்பட்டி மாற்றம் குறித்து அறியாததினால் வீதப்பட்டி மாற்றத்திற்கு மனுதாரர் விண்ணப்பம் எதுவும் கொடுக்கவில்லை.

(vi) மாணவியர் இல்லம் காலியான பின்பு ஆன்லைனில் குறைந்தபட்ச மின்கட்டணத்தை செலுத்தி வந்த மனுதாரர் வீதப்பட்டி மாற்றத்தை தனக்கு கொடுக்கப்படும் மின்கட்டண ரசீது மூலம் அறிந்திருக்க வேண்டும் என்ற வாதத்திற்கு வாரியம் விதிமுறைகளில் இடம் இல்லை. மேலும், குறைந்த மின் கட்டணத்திலிருந்து கூடுதலான மின் கட்டணத்திற்கு வாரியம் மின் வீதப்பட்டியை மாற்றி அதை நுகர்வோருக்கு தெரிவிக்காத பட்சத்தில் அதை நுகர்வோர் தான் மின்கட்டணம் செலுத்தியதற்காக பெற்ற மின்கட்டண ரசீது மூலம் அறிந்து வீதப்பட்டி மாற்றத்திற்கு

விண்ணப்பித்திருக்க வேண்டும் என்ற வாதத்திற்கும் மின்சார விதிமுறைகளில் எங்கும் ஆதாரங்கள் கிடையாது.

(v) முடிவாக விதப்பட்டி 1Aலிருந்து 2Bக்கு மாற்றப்பட்டது மனுதாரருக்கு தெரிவிக்கப்படாத நிலையில் மனுதாரரிடமிருந்து 2Bயிலிருந்து 1Aக்கு மாற்றுதல் மனு எதிர்பார்ப்பது நியாயமில்லை. மனுதாரரின் மின்இணைப்பு எண்.390–006–941க்கான வீதப்பட்டி மாற்றம் மார்ச் 2014 முதல் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்படவேண்டும். எந்தவிதமான நிபந்தனையும் இன்றி உடன் மறு மின்இணைப்பு வழங்கப்படவேண்டும். கூடுதலாக கட்டாயமாக நிர்பந்தப்படுத்தி வசூல் செய்த தொகை அனைத்தும் திருப்பி வழங்கப்படவேண்டும்.

8. <u>கேட்புரை நாளில் எதிர்மனுதாரர் எடுத்துரைத்த வாதங்கள்</u>

8.1 எதிர்மனுதாரரான உதவி பொறியாளர்/ஸ்ரீவைகுண்டம் அவர்கள் தனது பதிலுரையிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினர்.

8.2 மேல்முறையீட்டாளர் தன்னுடைய மேற்கண்ட மின்இணைப்பின் மின்கட்டண வீதப்பட்டியை IIB1லிருந்து IAக்கு மாற்றவேண்டும் என்று மனு செய்யவில்லை என்பதால் வீதப்பட்டி மாற்றம் செய்யப்படவில்லை என்று வாதிட்டார்.

8.3 மேலும், அரசு ஆதிதிராவிட மாணவியர் விடுதி அந்த வீட்டிலிருந்து காலி செய்த பின்பு மேல்முறையீட்டாளர்தான் மின்கட்டணத்தை செலுத்தியுள்ளார். அப்பொழுது அந்த மின்கட்டணத்திற்காக கொடுக்கப்பட்டுள்ள மின் ரசீதுகளில் அது எந்த கட்டண விகிதத்தில் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டு இருக்கும் நிலையில் அவர் Tariff மாற்றம் தனக்கு தெரியாது என்று வாதிடுவது ஏற்புடையதுஇல்லை என்று வாதிட்டார்.

8.4 மேலும், மேற்கண்ட விடுதி அந்த கட்டிடத்தில் இருப்பதை ஆய்வின் பொழுது தெரிந்ததால் அதற்கு உரிய மின்கட்டண வீதப்பட்டியலின்படி மாற்றப்பட்டது என்றும் அதை ஏற்றுக்கொண்டு

வாடகைதாரரால் IIB1 என்ற மின்கட்டண வீதப்பட்டியலின்படி மின்கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது என்பதையும் சுட்டிக்காட்டி பட்டியல் மாற்றம் வாடகைதாரருக்கு தெரியும் என்று வாதிட்டார்.

9. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

இந்த மேல்முறையீட்டாளர் நான்கு கோரிக்கைகளை தன்னுடைய மேல்முறையீட்டில் தெரிவித்துள்ளார். அவரின் மேற்கண்ட கோரிக்கைகளுக்கு கோரிக்கை வாரியாக தீர்வு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

10. <u>கோரிக்கை ஒன்றிற்கான தீர்வு</u>

10.1 இந்த வழக்கில் மேல்முறையீட்டாளர் தன்னுடைய கோரிக்கையில் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் உத்தரவு எண்கள் 71 நாள் 21.1.2016 மற்றும் 121 நாள் 3.2.2017 இரண்டையும் ரத்து செய்ய வேண்டும் என்று கோரியுள்ளார்.

10.2 மேற்கண்ட ஆணைகளில் 71 நாள் 21.1.2016 நாளிட்ட ஆணையை பெற்ற பின்பு சுமார் ஒருவருடம் கழித்துதான் இந்தமேல்முறையீட்டை சமர்ப்பித்துள்ளார். மேலும், அவருடைய மற்றைய கோரிக்கைகள் மன்றத்தின் 3.2.2017 நாளிட்ட ஆணையை பற்றியது.

10.3 மன்றத்தின் 21.1.2016 நாளிட்ட ஆணை அவரின் மின்இணைப்பு துண்டிப்பில் இருந்த பொழுது மறு மின் இணைப்பு வழங்குவதற்கு அவரின் கணவரின் பெயரில் இருந்த மின்இணைப்பு எண். B900ல் உள்ள நிலுவைத்தொகையும் சேர்த்து செலுத்தவேண்டும் என்பது பற்றிய முறையீடு. ஆனால், அவரின் கணவரின் மின்இணைப்பிலுள்ள நிலுவைத்தொகையை தவிர்த்து மற்ற நிலுவைத்தொகையையும் கட்டணங்களையும் பெற்றுக்கொண்டு மின்இணைப்பை மறு இணைப்பு செய்ய மன்றம் உத்தரவிட்டுள்ளது.

10.4 மேல்முறையீட்டாளரும் ரூ.1228/– செலுத்தி மறு மின்இணைப்பை பெற்றுள்ளார். ஆனால், அந்த தீர்விற்கு எந்த மேல்முறையீடும் உரிய காலத்திற்குள் மின்குறைதீர்ப்பாளர் முன்பாக

சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், அந்த கோரிக்கை அவருக்கு நிறைவேறிவிட்டது என்ற நிலையில் ஒரு வருடம் கழிந்த பின்பு அந்த ஆணையை ரத்து செய்யவேண்டும் என்று முறையீடுசெய்துள்ளார்.

**10.5** மன்ற விதி 8ன் படி ஒரு மேல்முறையீடு மன்ற ஆணை பிறப்பிக்கப்ட்ட 30 நாட்களுக்குள் செய்யப்படவேண்டும். இங்கு ஒரு வருடம் கழித்து தாமதமாக முறையீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், அதிலுள்ள கோரிக்கை தற்பொழுது இல்லை என்ற நிலையில் குறைதீர்க்கும் மன்றத்தின் உத்தரவு எண்.71 நாள் 21.1.2016ஐ ரத்து செய்ய வேண்டும் என்பதை தீர்வுக்கு எடுத்துக் கொள்ளவில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

## 11. <u>கோரிக்கை இரண்டிற்கான தீர்வு</u>

**11.1** மேல்முறையீட்டாளர் மார்ச் 2014முதல் கூடுதல் கட்டணமாக அவர் இதுவரை IIBல் கட்டியுள்ள அதிகபட்சமாக தொகை அவருக்கு திரும்ப வழங்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

**11.2** மேல்முறையீட்டாளர் மேற்கண்டகோரிக்கைக்கு கீழ்கண்ட வாதங்களை முன் வைத்துள்ளார்.

(i) அரசு ஆதிதிராவிடர் மாணவியர் இல்லம் மேற்கண்ட மின்இணைப்பு உள்ள அவரது வளாகத்தில் செப்டம்பர் 2003 முதல் இயங்கி வருகின்றது. மேற்கண்ட மின்இணைப்பை TARIFF IAலிருந்து IIBக்கு மாற்றப்பட்டது. 1.2.2008 முதல் என்று வாதிடப்படுகிறது. எனவே, IAல் இயங்கி வந்த அந்த மின்இணைப்பை அரசு ஆதிதிராவிட மகளிர் விடுதியாக உபயோகப்படுத்த ஆரம்பித்து 5 வருடங்கள் கழித்து IIB என்று மாற்றும்பொழுது மின்இணைப்பின் உரிமையாளரான அவருக்கோ அல்லது வாடகைதாரராக இருந்த அரசு ஆதிதிராவிடர் மகளிர் விடுதிக்கோ எந்தவிதமான முன்னறிவிப்போ அல்லது நோட்டிஸோ இல்லாமல் விகிதப்பட்டி மாற்றம் நடந்துள்ளது. அது இயற்கை நீதிக்கு புறம்பானது.

(ii) மின்இணைப்பின் மின்கட்டணம் 1.2.2008 முதல் IIB1 என்ற விகிதப்பட்டியலில் கணக்கீடு செய்யப்பட்டு வருகிறது என்று உதவி பொறியாளர் 11.1.2017 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார். ஆனால், தனி வட்டாட்சியர் அதிதிராவிடர் நலம் அவர்கள் தனது 17.2.2017 நாளிட்ட கடிதத்தில் விகிதப்பட்டி மாற்றம் செப்டம்பர் 2010 முதல் செய்யப்பட்டது என்று தெரிவித்துள்ளார். எனவே, இதில் இருவேறு அறிக்கைகள் உள்ளன என்று தெரிவித்துள்ளார்.

(iii) மேற்கண்ட விகிதப்பட்டி மாற்றம் சம்பந்தமாக அறிவிப்பு அவருக்கு வழங்கப்பட்டு இருந்தால் அவர் ஆதிதிராவிடர் மகளிர் இல்லம் காலியானவுடன் விகிதப்பட்டி மாற்றத்திற்கு தேவையான விண்ணப்பத்தை தந்திருக்க முடியும். ஆனால், விகிதப்பட்டி மாற்றம் அவருக்கு தெரியப்படுத்தவில்லை என்பதால் மின்கட்டணம் IA என்ற விகிதப்பட்டியல் படிதான் உள்ளது என்று கருதி விகிதப்பட்டி மாற்றம் கோரவில்லை என்று வாதிட்டுள்ளார்.

(vi) எனவே, தனக்கு விகிதப்பட்டி மாற்றம் பற்றிய தகவல் வாரியத்தால் தெரிவிக்கப்படாத நிலையில் தன்னிடம் விகிதப்பட்டி மாற்றம் குறித்த விண்ணப்பம் தரவில்லை என்று மின்கட்டண விகிதப்பட்டியலை மாற்ற மறுப்பது நியாயமற்றது என்று வாதிட்டார். மேலும், அவருக்கு மின்கட்டண பட்டியல் மாற்றம் பற்றி தெரிவிக்காதது உதவி பொறியாளரின் தவறு. எனவே, உதவி பொறியாளரின் தவறுக்கு அவரிடம் மின்கட்டண விகிதப்பட்டி மாற்றம் கோரி விண்ணப்பம் அளிக்கவில்லை என்று விகிதப்பட்டி மாற்றாமல் இருப்பது உரிமம்தாரர் தவறுக்கு நுகர்வோருக்கு தண்டனை அளிப்பதற்கு சமம் என்று வாதிட்டுள்ளார்.

(v) மேலும், மாணவியர் விடுதி காலியான பின்பு ஆன்லைனில் குறைந்தபட்ச மின்கட்டணத்தை செலுத்தி வந்த மனுதாரர் வீதப்பட்டி மாற்றத்தை தனக்கு கொடுக்கப்படும் மின்கட்டண ரசீது மூலம் அறிந்திருக்க வேண்டும் என்ற வாதத்திற்கு வாரிய விதிமுறையில் இடம் இல்லை. மேலும், குறைந்த மின் கட்டணத்திலிருந்து கூடுதலான மின்கட்டணத்திற்கு வாரியம் மின் வீதப்பட்டியலை மாற்றி அதை நுகர்வோருக்கு தெரிவிக்காத பட்சத்தில் அதை நுகர்வோர்தான் மின்கட்டணம்

செலுத்தியதற்கான பெற்ற மின்கட்டண ரசீது மூலம் அறிந்து வீதப்பட்டி மாற்றத்திற்கு விண்ணப்பத்திருக்க வேண்டும் என்ற வாதத்திற்கும் மின்சார விதிமுறைகளில் எங்கும் ஆதாரங்கள் கிடையாது என்று தெரிவித்துள்ளார்.

**11.3** எதிர்மனுதாரர் கீழ்கண்ட வாதங்களை முன் வைத்துள்ளார்.

(i) மனுதாரர் குறிப்பிட்டுள்ள மின்இணைப்பு எண்.**390–006–941**க்கு உரிய கட்டிடத்தில் அரசு ஆதிதிராவிட நலத்துறையின் மாணவியர் விடுதி இயங்கி வந்ததால் அதற்குரிய வீதப்பட்டியான **2**B**1**ல் கணக்கீடு செய்யப்பட்டு வந்தது.

(ii) மனுதாரர் மின்இணைப்பு எண்.**390–006–941**ஐ வீட்டு மின்இணைப்பாக Tariff IAல்இல்லத்திற்கு என்று பெற்றுள்ளார். ஆனால் அந்த கட்டிடத்தை அரசு ஆதி திராவிட மாணவியர் இல்லத்திற்கு வாடகைக்கு கொடுத்துள்ளார் ஆனால் இதுகுறித்து மின்வாரிய அலுவலகத்திற்கு எந்த தகவலும் அளிக்கவில்லை மாறாக வாரியத்தினால் அது கண்டுபிடிக்கப்பட்டு உரிய வீதப்பட்டிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

(iii) மனுதாரர் வீதப்பட்டி மாற்றம் குறித்து விண்ணப்பம் உதவி பொறியாளரால் கேட்கப்படவில்லை என கூறியுள்ளார். மனுதாரரின் மின்இணைப்பின் பயன்பாடுபற்றி மனுதாரர்தான் தெரிவிக்கவேண்டும். மின்இணைப்பின் பயன்பாடு மாறும்பொழுது மின்இணைப்பின் உரிமையாளர்தான் அதை தெரிவித்து உரிய மின்கட்டண வீதப்பட்டி மாற்றம் செய்து கொள்ள வேண்டும் என்றும் வாதிட்டுள்ளார்.

**11.4** இது ஒரு மின்கட்டண விகிதம் மாற்றம் பற்றிய கோரிக்கை என்பதால் நான் மின்சாரப் பகிர்மான செயல்திறச் செந்தாரங்களுக்கான ஒழுங்குமுறை விதிகளின் சம்பந்தப்பட்ட விதி **9**ஐ ஆராய விரும்புகிறேன். மேற்கண்ட விதி **9** கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***"9. Change of Tariff***

*A consumer can utilize a service connection given to him for a purpose different from the purpose for which he originally obtained the service connection, only if the*

*same tariff is applicable to the new purpose also. If a different tariff is applicable to the new purpose, the consumer shall apply to the Licensee before changing the purpose and a revised Test Report will be taken indicating the change in the tariff.*

*The Licensee shall effect change of tariff within seven days from the date of receipt of application from the consumer.*

*However no consumer shall be permitted to change the tariff of the service connection from any Low Tension Tariff (other than agriculture) to Low Tension Tariff for agriculture."*

**11.5** மேற்கண்ட விதி **9**ஐ கூர்ந்து படிக்கும்பொழுது நுகர்வோர் தன்னுடைய மின்இணைப்பை புதிய உபயோகத்திற்காக பயன்படுத்தும்பொழுது கட்டண விகிதத்தில் மாற்றம் இல்லையெனில் பெற்ற மின்இணைப்பை வேறு உபயோகத்திற்கும் பயன்படுத்தலாம். ஆனால், புதிய உபயோகத்திற்கு வேறு கட்டண வீதம் என்ற நிலையிருந்தால் பயன்பாட்டை மாற்றி கொள்வதற்கு முன்பே உரிமம்தாரருக்கு உரிய விண்ணப்பம் தந்து கட்டணவீதத்தை மாற்றம் செய்துகொள்ள வேண்டும் என்றும் திருத்திய சோதனை அறிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிகிறது. மேலும், மேற்கண்ட கட்டண வீதமாற்றம் நுகர்வோரிடமிருந்து விண்ணப்பம் பெற்ற ஏழு நாட்களுக்குள் செய்யப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**11.6** மேலும், இது சம்பந்தமாக தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பின் விதி **9**ஐ ஆராய விரும்புகிறேன்

***"9. Meter readings when there is changes in sanctioned demand etc.,***

*(1) Whenever there is change in the sanctioned demand, the change shall be effected, as far as possible, to coincide with the next meter reading. If , however, it is not possible so to do, the meter shall be reset and the maximum demand charges shall be billed proportionately for the respective periods.*

*(2) Whenever a tariff change is to be effected in a service connection, such change shall be effected only after obtaining a Revised Test Report (RTR) and the reading taken shall be conclusive proof of the [2][electricity consumed till the change of tariff."*

**11.7** மேற்கண்ட தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பின் விதி **9(2)**ன் படி மின்இணைப்பின் கட்டண வீதப்பட்டியலில் மாற்றம் செய்ய வேண்டுமெனில் அத்தகைய மாற்றங்களை திருத்திய சோதனை அறிக்கை பெற்ற பின்பே செய்ய வேண்டும். திருத்திய

சோதனை அறிக்கைக்காக எடுக்கப்படும் மின்னளவே(reading) மின்கட்டண பட்டியல் மாற்றத்திற்கு முன்புவரை உபயோகமான மின்பயன்பாட்டளவு ஆகும்.

**11.8** மேற்கண்ட தமிழ்நாடு மின்சார பகிர்மான செயல்திறச் செந்தரங்களுக்கான விதித்தொகுப்பின் விதி 9 மற்றும் தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பின் விதி 9(2) ஆகிய இரண்டையும் சேர்த்து படிக்கும்பொழுது நாம் அறிவது ஒரு மின்இணைப்பின் மின் உபயோகம் மாறும்பொழுது சம்பந்தப்பட்ட மின்இணைப்பின் நுகர்வோர் மின்கட்டண பட்டியல் மாற்றத்திற்கு விண்ணப்பம் அளிக்க வேண்டும் என்றும் அந்த விண்ணப்பத்தின் பேரில் திருத்திய சோதனை அறிக்கை தயாரிக்கப்பட்டு அந்த சோதனை அறிக்கையில் அப்பொழுது உள்ள மின்னளவியின் ரீடிங் பதிவு செய்யப்படவேண்டும் என்றும் அந்த பதிவு செய்யப்பட்ட ரீடிங் வரை பழைய மின்கட்டண பட்டியல் படிதான் மின்கட்டணம் வசூல் செய்யப்படும் என்றும் திருத்திய சோதனை அறிக்கையில் மாற்றி அமைக்கப்பட்ட மின்கட்டண பட்டியல் விபரம் தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் தெரிகிறது.

**11.9** ஆனால், இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட மின் நுகர்வோர், தன் மின்கட்டண பட்டியல் மாற்றம் சம்பந்தமான மனு செய்யவில்லை. மேலும், 2003 லிருந்து 1.2.2008 வரை அல்லது செப்டம்பர் 2010 வரை IAல் இருந்த மின்கட்டண பட்டியல் தனக்கோ அல்லது தன்னுடைய வாடகைதாரருக்கோ முன்னறிவிப்பின்றி மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று வாதிட்டுள்ளார்ர்.

**11.10** எதிர்மனுதாரர் உபயோகம் அரசு ஆதிதிராவிடர் மாணவியர் இல்லம் என்று மாறுபட்டுள்ளதால் 1.2.2008 முதல் மின்கட்டண பட்டியல் II-B1 என்று மாற்றப்பட்டுள்ளது என்றும் ஆனால், அது மேல்முறையீட்டாளரின் மனுவின்படி தான் மாற்றப்பட்டுள்ளது என்று வாதிடவில்லை.

**11.11** இங்கு உபயோகம் வீட்டிலிருந்து ஆதிதிராவிடர் மாணவியர் விடுதி என்று மாறுபடும்பொழுது மேற்கண்ட விடுதிக்கு உண்டான வீதப்பட்டியல்படி மாற்றப்பட்டுள்ளது என்று

வாதிட்டுள்ளார். எனவே, வீதப்பட்டி மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பது உண்மை நிலவரம். ஆனால், உரிமையாளர் தனக்கு வீதப்பட்டி மாற்றம் செய்தது தெரியாது என்று வாதிட்டுள்ளார்.

**11.12** வீதப்பட்டி மாற்றம் **1.2.2008** முதல் என்று உரிமம்தாரர் வாதிட்டுள்ளார். அதற்கு ஆதாரமாக கணினியில் உள்ள account summeryஐ ஆதாரமாக காட்டியுள்ளார். ஆனால், வேறு ஆவணங்கள் எதையும் சமர்ப்பிக்கவில்லை. மேல்முறையீட்டாளர் தனி வட்டாட்சியர் (ஆதிந) தூத்துக்குடி அவர்களின் **17.2.2017** நாளிட்ட கடிதப்படி செப்டம்பர் **2010**ம் ஆண்டு முதல் மாற்றப்பட்டுள்ளது என்றும் மார்ச் **2014** வரை Tariff II-B1 ஆகும் என்று தெரிவித்துள்ளார் என்று வாதிட்டுள்ளார்.

**11.13** மேற்கண்ட இருதரப்பு வாதங்களின்படியும் வீதப்பட்டி மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும் அரசு ஆதிதிராவிடர் நலத்துறையின் மாணவியர் விடுதி மேற்கண்ட கட்டிடத்தை காலி செய்யும் பொழுது விதிக்கப்பட்ட மின்கட்டணம் Tariff 2B1 ன் படி என்றும் அறிய முடிகிறது.

**11.14** தனி வட்டாட்சியர் ஆதி திராவிடர் நலத்துறை அவர்களின் கடிதப்படி சுமார் **3 1/2** வருடங்கள் மேற்கண்ட மின்இணைப்பு **2B1** என்ற வீதப்பட்டி வீதம் மின்கட்டணம் செலுத்தப்பட்டு வந்துள்ளது என்பதையும் அறிய முடிகிறது.

**11.15** மேலும், இந்த மேல்முறையீட்டாளர் மார்ச் **2014** ற்கு பிறகு **5/2014, 7/2014** மற்றும் **9/2014** ஆகிய கணக்கீடு காலங்களுக்கான மின்கட்டணத்தை **8.10.2014**லும் **11/2014** கணக்கீடு காலத்திற்கான மின்கட்டணத்தை **11.2.2015**லும் செலுத்தியுள்ளார். அப்பொழுது கொடுக்கப்பட்டுள்ள மின்கட்டண ரசீதில் மின்கட்டணம் எந்த Tariffல் விதிக்கப்பட்டுள்ளது என்ற தகவல் இருந்திருக்கும். எனவே, மேற்கண்ட மின்இணைப்பு எந்த Tariffல் கணக்கீடு செய்யப்பட்டு வருகிறது என்பது தெரியாது என்ற வாதம் ஏற்புடையது அல்ல.

**11.16** மேற்கண்ட மின்இணைப்பு செப்டம்பர் **2003** முதல் மார்ச் **2014** வரை அரசு ஆதிதிராவிடர் மாணவியர் விடுதியாக செயல்பட்டு வந்துள்ளது என்பதால் அதற்கு என்ன Tariffபடி மின்கட்டணம்

வசூல் செய்யப்படவேண்டும் என்பதை அறிந்து கொள்ள நாம் T.P.No.1 of 2002 என்ற Tariff Order ன் பத்தி எண்.5ஐ ஆராய வேண்டும். அந்த பத்தி எண்.5 கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

"*Table : Low Tension Tariff IIB:*

| Tariff | Energy Charges in paise/kWH | Fixed charges Rs/Month | Monthly Minimum in Rupees |
|---|---|---|---|
| LT Tariff II-B | 440 | 20 | 50 per month (or) 100 for two months |

*(i) This tariff is applicable to recognized educational institutions, hostels run by recognized educational institutions, hostels run by the Adi-Dravidar and tribal welfare and backward class welfare departments, Government Hospitals and the hospitals under the control of Panchayat Unions, Municipalities and Municipal Corporations, Veterinary hospitals, Leprosy Centre, Primary Health Centre, Health sub centers, Destitute home, Old age homes, Orphanages, Public Libraries, Laboratories, Research Institutes, Studios, Cinema Theaters, flood lighting arrangements at Rockfort temple and such other institutions declared by the Commission from time to time.*
*(ii) All consumers under this Category, having motor loads of 3 HP and more shall install adequate power factor improvement capacitors (ISI marked) . Non-compliance shall invite compensation charges as per TNEB's terms and conditions."*

**11.17** மேற்கண்ட பத்தியின்படி அரசு ஆதிதிராவிடர் மகளிர் விடுதி IIB என்ற (Tariff)ல் வரும் என்று அறிமுடிகிறது. மேற்கண்ட Tariff Order 16.3.2003 முதல் 31.7.2010 வரை அமலில் இருந்துள்ளது. மேலும், அதன்பிறகு உள்ள Tariff orderகளின் படி அரசு ஆதிதிராவிடர் விடுதிகள் IIB1 என்ற பிரிவில் வருகின்றது.

**11.18** எனவே, மேற்கண்ட மின்இணைப்பின் உபயோகம் அரசு ஆதிதிராவிடர் மாணவியர் விடுதி என்பதால் IIB/IIB1 என்ற Tariffன் படி மின்கட்டணம் வசூல் செய்யப்படவேண்டும். எனவே IIB/IIB1 என்ற Tariff ன் படி மின்கட்டணம் வசூல் செய்யப்பட்டது சரிதான் என்று தீர்வு செய்யப்படுகிறது.

**11.19** ஒரு மின்இணைப்பின் பயன்பாடுமாறும் பொழுது, அதன் பயன்பாட்டிற்குரிய Tariffற்கு மின்இணைப்பு மாற்றப்படவேண்டியது அவசியம். பயன்பாடு மாற்றம் நுகர்வோருக்குதான் தெரியும்.

எனவே, அவர்தான் அந்த மாற்றத்தை தெரிவித்து Tariffஐ மாற்றிக்கொள்ள வேண்டும். இங்கு வீட்டு பயன்பாட்டில் இருந்து மாணவியர் விடுதி என்று பயன்பாடு மாறியுள்ளது. அந்த மாற்றத்தை நுகர்வோர் உரிமம்தாரருக்கு தெரிவித்து Tariffஐ மாற்றியிருக்க வேண்டும். ஆனால், அவர் அவ்வாறு செய்யவில்லை.

11.20 மேற்கண்ட மின்இணைப்பின் உபயோகத்திற்கு தகுந்தாற்போல் Tariff மாற்றம் பெறவேண்டியது நுகர்வோரின் கடமை, ஆனால், இங்கு மின்இணைப்பின் உரிமம்தாரர் தன்னுடைய கட்டிடத்தை அரசு ஆதிதிராவிடர் மாணவியரின் விடுதிக்கு வாடகைக்கு விட்டுள்ளார். ஆனால், அந்த தகவலை மின் வாரியத்திற்கு தெரிவித்து Tariff மாற்றம் கோரவில்லை. எனவே, அந்த விடுதியின் மின்கட்டணம் அதற்கு உண்டான விகிதப்பட்டியில் உடனே மாற்றப்படாமல் பின்னர் சில வருடங்கள் சென்ற பின்பு சரியான விகிதப்படிக்கு மாற்றப்பட்டுள்ளது. விகிதப்பட்டி மாற்றம் எவ்வாறு ஏற்பட்டுள்ளது என்பதற்கு ஆவணங்கள் எதுவும் எதிர்மனுதாரரால் சமர்ப்பிக்கப்படவில்லை. ஆனால், computer உள்ள தகவல்படி அது 1.2.2008 மாற்றப்பட்டுள்ளது. ஆனால், மேல்முறையீட்டாளரின் வாதப்படி விகிதப்பட்டி மாற்றம் உபயோகப்படுத்தும் வாடகைதாரரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு செப்டம்பர் 2010 முதல் கட்டணம் 11B1ல் செலுத்தப்பட்டுள்ளது. எனவே, மின்கட்டணம் ஆறு வருடங்களுக்கும் மேலாக வாடகைதாரரால் மற்றும் உரிமையாளரால் IIB1 என்ற பட்டியலின்படி செலுத்தப்பட்டுள்ளது. தனி வட்டாட்சியர் ஆதிதிராவிடர் நலம் அவர்களின் 17.2.2017 நாளிட்ட கடிதத்தில் 2010ல் 2B1க்கு மாற்றப்பட்டது என்று தெரிவிப்பதால் வாடகைதாரருக்கு விகிதப்படி மாற்றம் தெரிந்துள்ளது என்றும் அறியமுடிகிறது. ஆனால், வாடகைதாரர் அந்த மாற்றம் பற்றி உரிமையாளருக்கு தெரிவிக்கவில்லை. மேலும், உரிமைதாரரும் அதே பட்டியலில் சுமார் ஒரு வருட காலத்திற்கான மின்கட்டணத்தை செலுத்தியுள்ளார். அந்த மின்கட்டண ரசீதுகளிலும், விகிதப்பட்டியல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளரின் வாடகைதாரருக்கு மின்கட்டண பட்டியல் மாற்றம்

ஏற்கனவே தெரிந்து உள்ளதாலும் மேல்முறையீட்டாளரும் அதே மின்கட்டண பட்டியல்படி மின்கட்டணம் செலுத்தி வந்துள்ளதாலும் மேல்முறையீட்டாளரின் வாதமான மின்கட்டண பட்டியல் மாற்றம் (tariff change) தனக்கு தெரியாது என்பது ஏற்புடையது அல்ல என்று தீர்வு செய்யப்படுகிறது.

**11.21** மேற்கண்ட மின்இணைப்பின் உபயோகம் மாறுபடும்பொழுது அதற்கு உரிய tariff மாறுபடும் என்றால் உரிய விண்ணப்பத்தை உரிமம்தாரரிடம் சமர்ப்பித்து கட்டணவிதிதத்தை மாற்றிக்கொள்ள வேண்டியது மின்இணைப்பின் உரிமையாளர்தான் என்பதால் Tariff மாற்றம் கோரும் விண்ணப்பம் அளிக்க வேண்டியது மேல்முறையீட்டாளரின் கடமையாகும். அவ்வாறுதான் மின்பகிர்மான செயல்திறச் செந்தரங்களின் விதித்தொகுப்பின் விதி 9ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, அவ்வாறு tariff மாற்றம் கோரும் விண்ணப்பம் அளிக்காமல் tariff மாற்றத்தை தனக்கு கட்டிடம் காலி செய்த நாளிலிருந்து மாற்ற வேண்டியது உரிமம்தாரரின் பொறுப்பு என்ற மேல்முறையீட்டாளரின் வாதம் ஏற்புடையது அல்ல என்று தீர்வு செய்யப்படுகிறது.

**11.22** எனவே, மேற்கண்ட நிலையில் மேல்முறையீட்டாளரின் மின்இணைப்பு எண்.390–006–941ன் tariffஐ மார்ச் 2014 முதல் IA என்று மாற்றியமைத்து அவரிடமிருந்து அதிகமாக வசூல் செய்யப்பட்ட மின்கட்டணத்தை திரும்ப வழங்க வேண்டும் என்ற கோரிக்கை ஏற்புடையது அல்ல என்று தீர்வு செய்யப்படுகிறது.

**12. <u>கோரிக்கை மூன்று மற்றும் நான்கு</u>**

**12.1** மேல்முறையீட்டாளர் தன்னுடைய வீட்டை யாருக்கும் வாடகைக்கு கொடுக்க முடியவில்லை என்பதால் அவருக்கு மாதமாதம் ரூ.12000/– நஷ்டம் என்றும் எனவே அந்த தொகையை மேல்முறையீடு முடியும் காலம் வரை கணக்கிட்டு வழங்க வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

12.2 மேற்கண்ட கோரிக்கை மன்றத்தின் முன்னால் வைக்கப்படவில்லை. மின்குறைதீர்ப்பாளர் ஒரு மேல் முறையீட்டை விசாரிக்கும் அலுவலர் என்பதால் மன்றத்தின் முன்பு சமர்ப்பிக்கப்படாத கோரிக்கைகளை ஏற்று அதற்கான தீர்வு வழங்க முடியாது. எனவே, மேற்கண்ட கோரிக்கை என்னால் பரிசீலிக்கப்படவில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

12.4 மேலும், அவரின் மனஉளைச்சல் சரீர பாதுகாப்பு வீட்டின் பராமரிப்பு வேலைக்காக சேகரிக்கப்பட்ட பொருட்கள் காணமல் போவதால் ஏற்பட்ட பொருளாதார நஷ்டம் இவைகளுக்கு ஈடாக ரூ.200,000/– கொடுக்க மின்வாரியம் அல்லது உதவி பொறியாளருக்கு உத்தரவு இடவேண்டும் என்று கோரியுள்ளார்.

12.5 அவர் மன்றத்திற்கு சமர்ப்பித்த மனுவில் ரூ.75000/– மனஉளைச்சல், அநீதிகள் பொருளாதார நெருக்கடி போன்றவைகளுக்கு ஈடாக தரவேண்டும் என்று கோரியுள்ளார். மேற்கண்ட கோரிக்கையில் சில மாற்றங்களுடன் மேல்முறையீட்டில் கோரிக்கை வைத்துள்ளார்.

12.6 இது சம்பந்தமாக நான் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதித்தொகுப்பின் விதி 7(11)ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“xxx xxx xxx*
*xxx xxx xxx*
*7(11) குறை முறையீடு, சட்டத்தின் 57 (1) வது பிரிவின்படி, ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள உரிமதாரர் கடைப்பிடிக்க வேண்டிய செயல் திறன் அளவுகளில் நுகர்வோர் சேவைத் திறன் அளவை உரிமதாரர் நிறைவேற்றாமை பற்றியதாக இருந்து, மன்றம் உரிமதாரர் தவறு செய்துள்ளார் என கண்டறிந்தால், நுகர்வோர் இழப்பீட்டுத் தொகை பெற தகுதியுள்ளவர் என முடிவு செய்யலாம். மேலும், நுகர்வோர் சம்மதித்தால், ஆணையத்தால் இது சம்பந்தமாக வகுக்கப்பட்ட ஒழுங்குமுறை விதிகளில் குறிப்பிட்டுள்ள இழப்பீட்டுத் தொகையைப் பெற ஒத்துக்கொள்ளலாம் என அறிவிக்கலாம்.”*

12.7 மேற்கண்ட விதியை கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது ஒழுங்குமுறை ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள செயல்திறன் அளவுகளில் நுகர்வோரின் சேவைத்திறன் அளவை உரிமதாரர்

நிறைவேற்றாமை பற்றியதாக இருந்து மன்றம் உரிமதாரர் தவறு செய்துள்ளார் என தெரிந்தால் நுகர்வோர் இழப்பீட்டு தொகையை பெறுவதற்கு தகுதியானவர் என்று முடிவு செய்யலாம் என்று தெரிகிறது.

**12.8** எனவே, ஆணையம் நிர்ணயித்துள்ள செயல்திறன் அளவுகளை உரிமதாரர் கடைபிடிக்காமல் இருந்தால் வழங்கப்படும் இழப்பீட்டு தொகையை தவிர வேறு நஷ்டஈடு வழங்குவதற்கு மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி முடியாது என்று தெரிகிறது.

**12.9** இந்த வழக்கில் கோரப்படுள்ள நஷ்டஈடு கோரிக்கை ஒழுங்குமுறை ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள செயல்திறன் குறைபாடு சம்பந்தமானது அல்ல என்பதால் மேற்கண்ட நஷ்டஈடு கோரிக்கை என்னால் பரிசீலிக்கப்படவில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

**13.** <u>**முடிவுரை**</u>

**13.1** மேற்கண்ட பத்தியிலுள்ள கோரிக்கை இரண்டிற்கான தீர்வின்படி மேல்முறையீட்டாளர் தன்னுடைய மின்இணைப்பு எண்.**390–006–941**ன் மின்கணக்கீடு விகிதப்பட்டியலை (Tarif) **IIB1**லிருந்து மாற்ற கோரும் விண்ணப்பம் சமர்ப்பிக்கவில்லை என்பதால் அவரின் கோரிக்கையான மார்ச **2014** முதல் கூடுதல் கட்டணமாக அவர் இதுவரையில் **IIB1**ல் கட்டியுள்ள அதிகபடியான தொகையை அவருக்கு திரும்ப வழங்க வேண்டும் என்பது ஏற்புடையது அல்ல என்று தீர்வு செய்யப்படுகிறது.

**13.2** அவரின் நஷ்டஈடு கோரிக்கை மின்பகிர்மான செயல்திறச்செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதித்தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ள செயல்திறன் அளவுகளில் நுகர்வோர் சேவைத்திறன் அளவை உரிமதாரர் நிறைவேற்றவில்லை என்பது சம்பந்தமானது அல்ல என்பதால் மேற்கண்ட நஷ்டஈடு கோரிக்கை என்னால் பரிசீலிக்கப்படவில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

13.4 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண்.18/2017 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

(ஆ.தர்மராஜ்)
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திருமதி. எப்சிபா கமலம் யோசுவா,
11/2, பெரியார் நகர் EB எதிரில்,
சென்னீர்குப்பம்,
பூவிருந்தவல்லி – அஞ்சல்,
சென்னை–600 056.

2) உதவி பொறியாளர்/பகிர்மானம்,
நகர்/ஸ்ரீ வைகுண்டம்,
தூத்துக்குடி மின் பகிர்மான வட்டம் ,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33/11 கே.வி. துணை மின் நிலைய வளாகம்,
புதுக்குடி ஸ்ரீ வைகுண்டம்.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
தூத்துக்குடி மின் பகிர்மான வட்டம் ,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
131, 132 எட்டையபுரம் ரோடு, தூத்துக்குடி–1.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19ஹ, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர், சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – <u>மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.